# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● டிசம்பர் 09, 2023

Weekly E-paper ● December 09, 2023




## புரட்டிப் போட்ட புயலும் மழையும்

சுப.வீரபாண்டியன்

**ஐந்து மாநிலத் தேர்தல்கள்; இது தொய்வுதான், தோல்வியல்ல!**

சாரதா தேவி

**வரவேற்போம், துணைநிற்போம் !**

தலையங்கம்

**கல்வியில் காவித்திணிப்பு! பா.ஜ.கவை வீட்டுக்கு அனுப்புவோம்!!**

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2054 ●டிசம்பர் 09, 2023 Weekly E-paper ● December 09, 2023


# புரட்டிப் போட்ட புயலும் மழையும்

**சுப.வீரபாண்டியன்**

*இயற்கையின் சீற்றத்திற்கு இரையானது சென்னை உள்ளிட்ட சில மாவட்டங்கள். 47 ஆண்டுகளுக்குப் பிறகு மாநகர் கண்டிராத மழையை மிக்ஜாம் புயல் கொண்டு வந்தது!*



*எத்தனையோ முன்னேற்பாடுகளை எண்ணி எண்ணித் தமிழ்நாடு அரசு செய்திருந்த போதிலும், இயற்கையின் சீற்றத்தின் காரணமாக இன்னல்கள் பலவற்றை எதிர்கொள்ளவே நேர்ந்தது. புயல் சென்னையைக் கடந்து நான்கு நாள்கள் ஆகிவிட்ட பிறகும், இன்னும் சில பகுதிகளில் பாதிப்புகள் இருக்கவே செய்கின்றன!*

*மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதும், தொலைபேசி இணைப்புகள் இல்லாமல் போனதும் பெரும் துயரமாக அமைந்தது. சென்னை மாநகரில் மட்டும் 1812 மின் தடங்கள் இருக்க, அவற்றுள் 1610 தடங்கள் இரண்டு நாள்களுக்குள்ளாகச் சரி செய்யப்பட்டன. இருப்பினும், மீதம் உள்ள 202 மின் தடங்களில் படிப்படியாக மக்கள் மின்சாரத்தைப் பெறுவதற்கு மேலும் சில நாள்கள் ஆகிவிட்டன! அந்தச் சில நாள்களில் மக்கள் பட்ட துயரங்கள் பெரியவைதான்!*

*வெளியூர்களில் இருந்து 2500 மின் ஊழியர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்களும் அந்தந்த இடங்களுக்குப் போய்ச் சேருவதற்குப் பல தடைகள் ஏற்பட்டுவிட்டன. புயலும் மழையும் சென்னை, திருவள்ளூர், காஞ்சி, செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் பெரிய துன்பத்தைக் கொண்டு வந்து சேர்த்து விட்டது!*

*இன்னும் ஓரிரு நாள்களுக்குள் இயல்பு நிலை திரும்பிவிடும் என்றாலும், ஏற்பட்ட இன்னல்களை மக்கள் பொறுத்திட வேண்டிய நிலையே இருக்கிறது.*

*இந்நேரத்தில் பொதுமக்களாகிய நாமும் கவனத்தில் கொள்ள வேண்டிய சில செய்திகள் இருக்கின்றன. வேளச்சேரி உள்ளிட்ட இடங்களில் ஏரிகளில்தான் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதேபோல பெருங்களத்தூர் முழுக்க முழுக்க வயல்வெடிகளைக் கொண்ட ஊர் . ஏரிகள் ஊர்களாக மாறும்போது இந்த அபாயம் ஏற்படும் என்பதை அரசும் மக்களும் முன் உணர்ந்திருக்க வேண்டும்!*

*அதேபோல குப்பைகள், நெகிழிகள் (பிளாஸ்டிக்) ஆகியனவற்றை எந்தக் கவலையும் இல்லாமல் மக்கள் தெருக்களிலும், கண்ட இடங்களிலும் போடுவது என்பது இன்றும் நம்மிடையே இருக்கும் பழக்கமாக இருக்கிறது. அந்த நெகிழிகள் தண்ணீரைத் தரைக்குள் போக விடாமல் தடுத்து விடுகின்றன என்பதும் உண்மை. எனவே மக்களும், மேலும் கூடுதல் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது!*

*வெள்ளம் வடிந்து போனதோடு, எல்லாம் முடிந்து விட்டது என்று கருதி விடக் கூடாது. வெள்ளம் கற்றுக் கொடுத்துவிட்டுப் போய் இருக்கும் பாடங்களையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்!*

●

# ஐந்து மாநிலத் தேர்தல்கள்; இது தொய்வுதான், தோல்வியல்ல!

**சாரதா தேவி**

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சத்திஸ்கர், தெலுங்கானா, மிஜோரம் ஆகிய ஐந்து மாநிலத் தேர்தல்கள் சென்ற நவம்பர் மாதம் நடந்து முடிந்து, டிசம்பர் 3 அன்று அதற்கான முடிவுகளும் வெளியாகிவிட்டன. மே 2024இல் நடைபெற இருக்கும் ஒன்றிய அரசின் தேர்தலுக்கான முன்னோட்டமாகவே இந்த ஐந்து மாநிலத் தேர்தல்கள் பார்க்கப்பட்டதால் அதன் முடிவுகளும் பெரும் எதிர்பார்ப்பையும், ஆளும் பா.ஜ.க.விற்கு கடும் நெருக்கடியையும் ஏற்படுத்தின.

தேர்தல்களுக்கு முன்பும் பின்புமான கருத்துக் கணிப்புகள் காங்கிரஸ் கூட்டணியே மூன்று மாநிலங்களில் ஆட்சியைக் கைப்பற்றும் எனக் கூறின. ஆனால் முடிவுகள் வேறு விதமாக அமைந்து விட்டன. மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்திஸ்கர் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்துள்ளது. தெலுங்கானாவில் ஆளும் தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சியைத் தோற்கடித்துக் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்துள்ளது. மிஜோரத்தில் ஜோரம் மக்கள் இயக்கம் ஆட்சியைப் பிடித்துள்ளது.

இந்தத் தேர்தலில் மக்களின் மனநிலை என்ன என்ற ஆய்வு செய்ததில் பல கவனிக்கத் தக்க தகவல்களை அறிய முடிகிறது. மொத்த 5 மாநிலங்களின் வாக்குகளில் காங்கிரஸ் 4.92 கோடி வாக்குகள் பெற்றுள்ளது. பா.ஜ.க. 4.81 கோடி வாக்குகள் பெற்றுள்ளது. பா.ஜ.க. வெற்றி பெற்ற தொகுதிகள் என்று பார்த்தாலும், மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.க. 48.55% – காங்கிரஸ் 40.40% ; ராஜஸ்தானில் பா.ஜ.க. 41.69% – காங்கிரஸ் 39.53% ; சத்திஸ்கரில் பா.ஜ.க. 46.27% – காங்கிரஸ் 42.23% என்று குறைந்த சதவிகித வாக்குகளே பா.ஜ.க.விற்குக் கூடுதலாகக் கிடைத்துள்ளன. இதுதான் மக்களின் மனநிலை. இங்கே கவனிக்க வேண்டிய செய்தி பா.ஜ.வுக்கு கூடுதல் தொகுதிகள் வெற்றியாகக் கிடைத்துள்ளன. கொஞ்சம் வாக்காளர் பட்டியலை சரி செய்வது, பூத்தில் சரியான ஆட்களை அமர்த்துவது போன்ற நுட்பமான தேர்தல் வேலைகளைப் பார்த்திருந்தாலே பல இடங்களில் காங்கிரஸ் வென்று இருக்கும்.



அதையும் கடந்து இ.ந்.தி.யா. கூட்டணி கட்சிகளுடன் சிலபல இடங்களில் மோதல் போக்கும், மூத்தவர்களின் சட்டாம்பிள்ளைத் தனமும் இருந்தது என்பது காங்கிரஸ் கட்சிக்கு இழப்பாகப் பல இடங்களில் முடிந்துள்ளது. மாயாவதி தனித்து நிற்க எடுத்த முடிவும் காங்கிரஸ் கட்சியின் தலித் வாக்குகளைப் பிரித்துள்ளது. குறைந்த வாக்குகள் அனைத்தும் பகுஜன் சமாஜ் கட்சிக்கு மடைமாற்றப்பட்டதும் புலனாகியுள்ளது. தமிழ்நாட்டில் சீமான் போல வடக்கில் மாயாவதி? இந்துத்துவ பா.ஜ.க. வின் மோசடி அரசியலுக்கு விலை போய்விட்டாரா என இன்னும் ஆழமான விசாரணைகள் தேவைப்படுகின்றன. 2024 தேர்தலிலும் அவருடைய நிலைப்பாடு மாறாவிடில் அவரையும் அம்பலப்படுத்தி, இ.ந்.தி.யா. கூட்டணி ஆழமாகவும் வேகமாகவும் ஆய்வு செய்து தன் வியூகத்தை மாற்றி அமைப்பது குறித்து முடிவு செய்வது நலமாக இருக்கும். தகுந்த தேர்தல் வல்லுநர்களின் துணையோடு அதைச் செய்வது பலனளிக்கும்.

இவையெல்லாம் மேற்கட்டுமான சரிசெய்தல் மட்டுமே. அடிப்படையில், இ.ந்.தி.யா. கூட்டணி நாட்டில் இருக்கக் கூடிய குடிமைச் சமூகங்களுடன் நல்லுறவைப் புதுப்பிக்கவும், இதுவரை இல்லாத இடங்களில் ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அறிவும், சேவையும், ஜனநாயக வேட்கையும் இணையும் குடிமைச் சமூகங்கள் உள்ளபடியே இந்துத்துவ பாசிச இலக்கு நோக்கி நகரும் பா.ஜ.க. அரசை இம்முறை எப்படியாவது வெற்றிபெற விடாமல் இருப்பதில் பெருத்த கவனம் செலுத்த முனைகின்றன. அதே நேரம் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகளாக அவை, நெடுங்காலமாக கவனிக்கப்படாத சில கோரிக்கைகளையும் முன்னிறுத்த முயல்கின்றன. அச்சமூகங்களை இ.ந்.தி.யா கூட்டணி தன் நம்பிக்கைக்குரிய வட்டத்தில் கொண்டு வந்து அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற உறுதி செய்வதும், நாடு மீண்டுமொருமுறை எதேச்சதிகார பார்ப்பனிய பனியா கூட்டுக் கொள்ளைக் காரர்களிடம் செல்வதைத் தடுக்க வழி செய்யும்.

மிஜோரம் தேர்தலில் ஜோரம் மக்கள் இயக்கம் 27 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கிறது. அவர்களுடைய சித்தாந்தமே இந்துத்துவ எதிர் மதச்சார்பின்மையும், சிறுபான்மையினர் நலனும் என்று பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பதும், அவர்களது வெற்றியும், வடகிழக்கில் பா.ஜ.க. மீதான கோபமும் வெறுப்பும் குவிமயப்படுவதற்கான நல்ல அறிகுறி! அதைச் சரியாக இ.ந்.தி.யா கூட்டணி தன் மதச்சார்பின்மை கருத்தாக்கத்தைக் கொண்டு ஒருங்கிணைக்க வேண்டும்.

ராகுல் காந்தி அவர்கள் மக்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக ஜனநாயகப் பண்பு பாராட்டியுள்ளார். பிரியங்கா அவர்கள், மூன்று மாநிலங்களில் மக்கள் தங்களை வலுவான எதிர்க்கட்சியாகப் பணி செய்யச் சொல்லி இருக்கிறார்கள் என்று சொன்னது தான் சரியான அரசியல் பார்வை. பா.ஜ.க.வின் எதேச்சதிகாரப் போக்கைக் கட்டுப்படுத்தும் பெரும் பங்கு அந்த மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு உள்ளது.

சில பல தேர்ந்த கணக்குகளாலும், அதிகார வரம்பு மீறல்களாலும், பண பலத்தாலும், வெறுப்பரசியலாலும் தேர்தல் வெற்றிகள் சாத்தியப்படுகிறதே ஒழிய, பா.ஜ.கவிற்கு மக்கள் பெருவாரியாக வாக்களிக்கவில்லை! அவர்கள் ஆட்சியைக் கோரவும் இல்லை.

2024 தேர்தலில் இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பை மக்கள் இ.ந்.தி.யா கூட்டணிக்கு அளிப்பார்கள். அதற்கு மக்களின் வெறுப்பையும், கையறு நிலையையும் சரியாக ஒருங்கிணைத்து, குறைகளைக் களைந்துகொண்டு, ‘ஒற்றுமை’யாக வீறு கொண்டு எழவேண்டும் இ.ந்.தி.யா கூட்டணி!

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## வரவேற்போம், துணைநிற்போம் !

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்று இயற்கையின் விதியை அன்றே சொல்லிருக்கிறார் பெரும்புலவர் திருவள்ளுவனார்.

2015ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்கும், இப்பொழுது 'மிக்ஜாம்' புயலின் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கும் வேறுபாடு உண்டு, இரண்டையும் ஒப்பிடக்கூடாது.

வீதிகளில், பாலங்களின் அடியின் மழைநீர் தேங்கக் கூடாது என்று நீர் வடிகால் பணிகளைத் திட்டமிட்டு செய்து முடித்து, ஆறுகள், ஏரிகள் போன்றவைகளையும் தூர்வாரி, அனைத்து நிலைகளிலும் மிக்ஜாம் புயலை எதிர்கொண்டு இருக்கிறது முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு.

36 மணி நேரம் கனமழை. இதில் 12 மணி நேரம் மிகக்கன மழை. இயல்பை விட ஏறத்தாழ 400 சென்டி மீட்டர் பெய்த மழையின் கூடுதல் தண்ணீர், சில மணி நேரத்தின் புயலின் தாக்கம். முறிந்து விழுந்த மரங்கள், சரிந்து விழுந்த மின்கம்பங்கள். . உயிர்களைக் காப்பாற்ற உடனடி மின் நிறுத்தம், போக்குவரத்துப் பாதிப்பு.... இதற்கு மேல் சொல்ல வார்த்தைகள் இல்லை.

ஆழிப்பேரலையைப் போல மழைநீர் நிறைந்து, சூழ்ந்த பகுதிகளில் எல்லாம் முதல்வர் ஸ்டாலின், அமைச்சர்கள் உதயநிதி, கனிமொழி, துரைமுருகன், மா.சுப்பிரமணியன், மனோ தங்கராஜ் என்று அமைச்சர்களும், சென்னை மேயர் பிரியா உள்பட அதிகாரிகள் பட்டாளம், அரசுப் பணியாளர்கள் என அனைவரும் மக்களுடன் களத்தில் நின்று அவரவர் கடமையைச் செய்தார்கள். முதல்வர் ஸ்டாலின் அவர்களின் இந்தப் போர்க்கால, அவசரகால நடவடிக்கைகளினால் இப்பொழுது பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்கள் உடனடியாக இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறன.

பாதிக்கப்பட்ட மக்களிடம் ஆவேசமும், கோபமும் இருப்பதை மறுக்க முடியாது. ஆனாலும் 'இயற்கையின் பேரிடர்' 'இயற்கையின் பாதிப்பு' என்பதும் அவர்களின் உள்ளுணர்வில் இருக்கத்தான் செய்யும்.


இந்த நேரத்திலும் கூட 'எதிரி'க்கட்சியாகவே தோற்றம் தரும் அ.தி.மு.க. 2015 ஐ மறந்துவிட்டுத் தவளையைப் போலக் குறைகளையே பேசிக் கொண்டு இருக்கிறார்களே ஒழிய மக்கள் குறைகளைக் களைய களத்தில் அவர்களைக் காணவில்லை. பாவம், இன்னொரு தவளைக் குஞ்சு அண்ணாமலைக்கு இப்போது படகு ஒன்றும் கிடைக்கவில்லை போலும். அவர் பங்குக்கும் குறை சொன்னார், போய்விட்டார்.

இந்நிலையில் 5060 கோடி ரூபாய் முதல்கட்ட நிவாரண நிதியாக ஒன்றிய அரசிடம் நம் முதல்வர் கேட்டிருக்கிறார். ஆனால் இப்பொழுது (முதல் தவணையாக) ஒன்றிய அரசு கொடுத்திருப்பது வெறும் 450 கோடி என்கிறது செய்தி.

தன் உடல்நலம் பேணாமல், மக்களின் வாழ்க்கைக்காக மழை நீர் சூழ்ந்த பகுதிகளில் நின்று பணியாற்றும் முதல்வர் ஸ்டாலின் அவர்களை இந்தக் குறள் நினைவூட்டுகிறது.

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் ஆண்ட(து) அமைச்சு"

முதல்வர் ஸ்டாலின் அவர்களுடன் இணைந்து நிற்போம், முதல்வரைப் பாராட்டுவோம்!




**ஆண்டுக் கட்டணம் - ரூ.400**

Account Name: Diravida Muzhakkam

Account Number: 1085102100000363

Bank: Punjab National Bank

Branch name: Kodambakkam

IFSC: PUNB0108510

# கல்வியில் காவித்திணிப்பு!
# பா.ஜ.கவை வீட்டுக்கு அனுப்புவோம்!!

**வெற்றிச்செல்வன்**

அண்மையில் தேசிய மருத்துவ ஆணையத்தின் இலச்சினையில்(*Logo*) இருந்த அசோகா சின்னம் நீக்கப்பட்டு இந்து கடவுள்களில் ஒருவராகக் கருதப்படும் ‘தன்வந்திரி’யின் படமும், இந்தியா என்பதற்குப் பதிலாக ‘பாரத்’ என்றும் மாற்றப்பட்டு உள்ளதாகவும், இது இந்தியாவின் மதச்சார்பின்மைக்கு எதிராக பாஜக மேற்கொண்டு வரும் நடவடிக்கை என்று மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் சொல்லியிருந்தார்.

உண்மைதான்! இந்த காவி வேலையை அது தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்கிறது.

தேசிய கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான குழு (*NCERT*), இராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகியவற்றைப் பள்ளி மாணவர்களின் பாடத்திட்டங்களில் சேர்க்கலாம் என்று ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளது. பின்னர், அப்பரிந்துரை என்.சி.இ.ஆர்.டி. அமைத்த குழுவின் தலைவர் ஐசாக்கின் தனிப்பட்ட கருத்து என்றும் செய்தி வெளியாகியுள்ளது.




இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள் கதைகள் மட்டுமே. அவை வரலாற்றுடன் எந்தவிதத் தொடர்பும் கொண்டவை இல்லை. நல்லொழுக்கத்தைப் போதிப்பதற்காக இவை பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படுகின்றன என்று காரணம் சொல்லப்படுகிறது. ஆனால், வருணாசிரம தர்மம், ஆணாதிக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையிலும், ஒழுக்கக் கேடுகளின் மொத்த உருவமாகவும் உள்ளவை இக்கதைகள் என்பது இவற்றைப் படித்தவர்களுக்கு விளங்கும். இராமன் சீதையின் கற்பைச் சந்தேகித்ததையும், சம்புகன் கொல்லப்பட்ட காரணத்தையும், மகாபாரதப் போரில் வஞ்சகத்தால் வெற்றி பெறும் கதையையும் இவர்கள் கொண்டுவரும் பாடத்திட்டத்தில் சேர்ப்பார்களா? இவற்றைப் படிக்கும் மாணவர்கள் எப்படி அறம் சார்ந்து, ஒழுக்கம் சார்ந்து வளர முடியும்?

இராமாயணம் குறித்த விரிவான விமர்சனத்தைத் திராவிட இயக்கம் எப்போதும் முன்வைத்து வந்துள்ளது. தந்தை பெரியாரின் ‘இராமாயணப் பாத்திரங்கள்’, அறிஞர் அண்ணாவின் ‘நீதிதேவன் மயக்கம்’, ‘கம்பரசம்’ ஆகியவை இராமாயணத்தில் உள்ள அறமற்ற, ஒழுக்கமற்ற செய்திகளை அப்போதே மக்களிடம் எடுத்துச் சென்றன. திராவிடரை இழிவுபடுத்தி, ஆரியரை உயர்வானவர்களாகக் காட்டும் கம்பராமாயணம் கொளுத்தப்பட வேண்டும் என்ற இயக்கம் நடந்த மாநிலம், தமிழ்நாடு. அண்ணல் அம்பேத்கர் இராமன், கிருஷ்ணன் குறித்து எழுதியவை இன்றும் இருக்கின்றன. ஒருவேளை ஒன்றிய அரசு இராமாயணம் அல்லது மகாபாரதம் குறித்து பாடத்திட்டத்தில் பாடங்கள் சேர்க்க வேண்டும் என்றால், வாக்குகளுக்காக மட்டும் அம்பேத்கரைக் கொண்டாடுபவர்கள் அவர் எழுதியவற்றை நேர்மையாகப் பாடத்திட்டத்தில் சேர்க்கட்டுமே!

பா.ஜ.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் வரலாற்றைத் திரிப்பதும், மாற்றி எழுதுவதுமான வேலைகளிலும் ஈடுபட்டு வருகிறது. இதை நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், தனது “*The Argumentative Indian*” புத்தகத்தில் குறிப்பிடுகிறார். பா.ஜ.க.ஆட்சிக்கு வந்ததும் என்.சி.இ.ஆர்.டி. குழு மாற்றி அமைக்கப்படுவதும், இந்துத்துவத்தைப் பரப்பும் நோக்குடன் புத்தகங்கள் மாற்றி எழுதப்படுவதாகவும் அவர் தனது நூலில் குற்றம் சுமத்தியுள்ளார். சான்றாக, காந்தியைக் கோட்சே கொன்றார் என்ற தகவல் பாடப் புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டது. சிந்து சமவெளி நாகரிகம், சிந்து-சரஸ்வதி நாகரிகம் என்றழைக்கப்பட்டது. எனவே இதுபோன்ற வரலாற்றைத் திரிக்கும் வேலைகள் பா.ஜ.க.வுக்குப் புதிதன்று.

அதுமட்டுமின்றி, இந்தியா போன்ற ஒரு மதச்சார்பற்ற நாட்டில், ஒரு மதத்தின் புராணங்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படுவது, மதச்சார்பின்மைக்கும், அரசியலமைப்பிற்கும் எதிரானது. தொடர்ந்து தனது இந்துத்துவக் கொள்கைகளை மக்களிடம் திணிக்கும் வேலையில் ஈடுபட்டு வரும் பா.ஜ.கவை வருகின்ற தேர்தலில் வீட்டுக்கு அனுப்புவது, நாட்டுக்கு நல்லது.

●

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408